**Minutes of Public Hearing held on 13.10.2023 at 10.30 A.M. held in Nainar Mahal, Munnirpallam Post, Mela Karungulam Village, Palayamkottai Taluk, Tirunelveli District with respect to the project of M/s. Joseph John Samuel. Rough Stone and Gravel Quarry extent of 0.55.0 Hect at S.F. No.845/1B & 845/2B, Tharuvai Village, Palayamkottai Taluk, Tirunelveli District.**

**Details of participants in this meeting**

| | |
|---|---|
| Thiru. A. Seik Ayub | : Revenue Divisional Officer, Tirunelveli, Tirunelveli District. |
| Tmt. C. SuyambuThangarani | : District Environmental Engineer, TNPC Board, Tiruneveli. |
| Public and Government Officials | : Details are attached (Annexure-1) |

The public hearing under EIA Notification, 2006 for the proposed project of M/s. Joseph John Samuel Rough Stone and Gravel Quarry, S.F. Nos. 845/1B & 845/2B, Tharuvai Village, Palayamkottai Taluk, Tirunelveli District was conducted at M/s. Nainar Mahal, Munnirpallam Post, Mela Karungulam Village, Palayamkottai Taluk, Tirunelveli District on 13.10.2023 at 10.30 A.M.

District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli welcomed the Revenue Divisional Officer, Tirunelveli, members of the public, industry representatives and police officials who have attended the Public Hearing. She informed that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification 2006. She also stated that the views, suggestions and queries of the public will be recorded through videographey and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

Then the Revenue Divisional Officer, Tirunelveli asked him to preside over and inaugurate the Public Hearing meeting.

The Revenue Divisional Officer, Tirunelveli initiated the Public Hearing process. He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videographey and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu. The RDO, Tirunelveli requested the project proponent to explain about their proposed project.

Then the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s. M/s. Joseph John Samuel Rough Stone and Gravel Quarry to the Public along with Environmental Management plan by Power Point Presentation.

After that, Revenue Divisional Officer, Tirunelveli, said that the public to express their views on the project orally or in writing. Hence also informed that the public views are recorded and will be to the government.

After that, the public has furnished their views with respect to the project as follows.

1. **Thiru.Thangamani, Kandithankulam Village**

He said that Sam sir Quarry is set up near my village. Around 60 numbers of peoples have been working. Fifty families have got their livelihood through that quarry. The benefits we have received through it, and the livelihood of the family has been done through it. Our gardens have been set up in close proximity to the environment. About 500 meters of it just exists. There is no harm through it. Families are getting good development through this quarry. Don't compare about an accident that happened nearby. It was an accident. Many train services are found in our country of India. Many train accidents occur and many lives are lost due to those train services. It's an accident and we have to make sure it doesn't happen. There is no accident in this quarry. When taking the soil, our sam sir, were protecting it to the extent that it does not spread moisture and dust. Through this, construction works are going on through this plant. There is a decision that river sands should not be used now, many buildings and houses are being constructed through this M-sand and requesting to issue NOC to the quarry.

2. **Tmt. Jebathai Selvarani, Adaimithipankulam Village**

She said that, We come to hear what the opinions are. I begin my speech by thanking all the people in general. In our town the quarry is usually important from the age of one. Without the quarry we would have been unfit to live. Even children as young as ten years of age have been working in this quarry and saving our children even with a salary of ten rupees. Even in our ancestors' time, they saved the children with the help of this quarry. The quarry helped us to build houses, do other public works and also use to put roads. Quarry has been leading the area of our village proudly. The owneres also helped us a lot and came to save our children and contract peoples in Quarry helped and guide our children for their generations. We have many supporters like Rajan sir. People have done a lot of good. It has done many advantages no disadvantages. We want this quarry. Therefore, he requested the government to give permission for this quarry.

3. **Thiru.Jacob Rajamani, Omanallur Village**

He said that he was working as a JCB driver and the economy would be good only if he got a pass in the quarry. If this quarry is established, sand and stones for building houses will be available at half price. It supports us. And all the participants in this meeting are the villagers around the quarry. We are not affected by the quarry. So he requested to give permission for this quarry. He asked that this quarry is very necessary for our livelihood.

4. **Tmt. Nirmala, Adaimithipankulam Village**

She said that his place of residence is 2 km away from the quarry. More than a hundred people are working from our town. Also she told that this quarry will pave the way for the livelihood of many people, he expressed his opinion that it would be beneficial for everyone if a small pit is constructed instead of a large borewell.

5. **Tmt. Jansi, Adaimithipankulam Village**

She said that, quarry is established about 2 kms near his village and this quarry will provide employment opportunities to many people, The peoples livelihood will be benefitted. She also told that cost of building of house will be reduced as the stone and gravel types are available nearby.

6. **Thiru. Vetrivel, Adamithipankulam Village**

He said that we have no objection in granting permission for this quarry. Because the quarries were not working for a year, so the public was affected. Many people survive from this quarry. Mr. Joseph John Samuel fulfilled our request. So he requested permission for this quarry.

7. **Thiru. Mounadurai, Bunglow Kudiruppu Village**

He said that he has been working in the quarry for the past 30 years. There is no profit or loss in breaking the rock. Man has no value. The owners only take care of any custom. He asserted that there is no harm to the public due to these quarries and requested the government to give permission for such quarries immediately. He said that the government should also give permission to the government quarries and make a way to run them.

8. **Thiru. Kenndy, Adaimithipankulam Village**

He said that, I am 55 years old and said that he was running a soda color company since his childhood and his business was paralyzed after fake companies came in. I have been doing soda color business since I was 14 years old. I have been going to the quarry since I was 25 years old. This quarry has kept me alive for 13 years. Even from northern states they also work in this quarry. After that; He also said that he has been working in the quarry for more than 30 yearsSo he requested permission for the said quarry.

9. **Tmt. Indira, Adaimithipankulam Village**

She said that there are no disadvantages except the advantages of quarrying. Therefore, he requested permission for this project.

10. **Thiru.Jackson, Pookuli Village**

He said that he is running a business with his own lorry, and if quarry is located nearby, there is an alternative to bringing sand and gravel from far away, diesel will be saved and the family's livelihood will be improved. He also asked for permission to conduct the quarry which would be beneficial to all.

**11. Tmt. Violet Lakshmi, Adaimithipankuam Village.**

She said that, We are benefiting a lot from the quarry and it is useful to get M-Sand for build houses and roads. So she requested permission for this quarry.

**12. Thiru.Inbaraj, Adaimithipankulam Village**

He said that the quarry will bring many benefits to our town. So he requested permission for this quarry.

**13. Tmt.Annapuspham, Adaimithippankulam Village**

She Claiming that this quarry would bring many benefits, she requested permission for this quarry.

**14. Tmt.Thangamani, Adaikithipankulam Village**

He told that, we break the stone from childhood. He said that there is no harm from the quarry and that there are many quarries around our town and requested permission for this quarry.

**15. Thiru. Daniel, Kandithankulam Village**

He said that, Mr. Joseph John Samuel has been running the quarry since his grandfather. Many truck drivers will benefit. He said that the owners of this quarry are have experience in running the quarry for a long time and that the operation of the quarry in the area will bring a lot of benefits to the people of the area. He also said that in the past the above mentioned quarry has been operating under the government regulations. So as per government rules, he asked for permission.

**16. Thiru. Soundararajan, Adaimithipankulam Village**

He said that, we need business. There is no agricultural work in our area. Therefore, if this quarry is established, it will be a source of livelihood for the people of our area and requested permission for the quarry.

**17. Thiru. Kumar, Adaimithipankulam Village**

He said that they have no objection to the construction of this quarry. He also claimed that he had a garden near the said quarry and that some people were blocking the footpath leading to his garden. However, he maintained that he was not affected by the quarry and said that he would initiate his protest if he has not given access to his land.

**18. Thiru.Ravi, Pookuli Village**

He said that there are many benefits from this stone quarry and there are no disadvantages and requested permission for this quarry.

**19. Tmt. Thangamuthu, Adaimithipankulam Village**

He added said that quarrying brings many benefits. Lot of peoples were living in our town with the help of quarry. So, he asked them to grant permission to the quarry immediately.

**20. Thiru. Solomon, Mundradaippu Village**

He said that the quarry brings many benefits and since the quarry is close to the town, it is convenient for us to go home and see our children and requested permission for the quarry.

21. **Tmt. Selvarani, Adaimithippankulam Village**

She said that there are many benefits from this stone quarry and there are no disadvantages and requested permission for this quarry.

22. **Thiru. Simsonraj, Adaimithippankulam Village**

He asserted that quarries have been operating in this area for 30 years and there is no harm due to them. So she requested permission to set up the quarry.

23. **Thiru. Devasingam, Adaimithippankulam Village**

He said that there is no harm due to the quarry and therefore requested permission to set up the quarry.

24. **Thiru. Balakrishnan, Adaimithippankulam Village**

He said that there is no damage from the quarry, but other industrial resources are affected. If this quarry comes, it will be beneficial for the people. So he also requested permission to set up the quarry.

25. **Thiru. Anbu Herold, Mundradaippu Village**

He said that if this quarry is established, around 250 people will get employment and the cost of stone and gravel will be cheap. So he asked for permission to be given for the proposed quarry.

26. **Thiru. Rajamani Alex Raja, Adaimithippankulam Village**

This quarry is beneficial. He told that if the quarry is located in this area, there will be no harm in getting cheap stone and gravel. So he requested permission for this quarry.

27. **Tmt. Ganagapuspham, Adaimithippankulam Village**

He asked for permission to the quarry.

28. **Tmt. Shanthi, Adaimithippankulam Village**

She said that, if this quarry is located nearly the cost of stone, sand, etc. required for building houses is available at a low price, If this quarry is located in this area, it will be beneficial for us.

29. **Tmt. Jayasuriya, Adaimithippankulam Village**

She said that, Quarry and crusher in our area Setting up a livelihood. But a pit should not be built in a quarry. Compressor without making a trench; Pit should be made. Similarly, it exploded without using ED, there will be no harm to the town. He added that it is beneficial for everyone when it is operated safely without the spread of dust.

At the end of the meeting, after receiving the petitions given by the public in written form, Revenue Divisional Officer, Tirunelveli thanked all the public who had remained calm and voiced their opinions so far. The meeting was concluded with informing that all the comments of the Public have been recorded and the recorded comments will be sent to the Government.

**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Tirunelveli**

27.10.23
**Revenue Divisional Officer,**
**Tirunelveli.**

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், தருவை கிராமம், புல எண். 845/1B மற்றும் 845/2B பகுதி, விஸ்தீரணம் 0.55.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். ஜோஸப் ஜான் சாமுவேல் ரப் ஸ்டோன், ஜல்லி மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 13.10.2023 அன்று காலை 10.30 மணியளவில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், முன்னீர்பள்ளம் அஞ்சல், மேல கருங்குளம் கிராமம், நைனார் மஹாலில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்ட நிகழ்வின் சுருக்கம்.

இக்கூட்டத்தில் பங்குபெற்றவர்களின் விபரம்

1. திரு.A. ஷேக் அயூப் - வருவாய் கோட்டாட்சியர்
திருநெல்வேலி,
திருநெல்வேல மாவட்டம்.

2. திருமதி. செ. சுயம்பு தங்கராணி - மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி.

3. பொதுமக்கள் மற்றும் அரசுஅதிகாரிகள் - பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

******

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், தருவை கிராமம், புல எண். 845/1B மற்றும் 845/2B, விஸ்தீரணம் 0.55.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். ஜோசப் ஜான் சாமுவேல்ரப் ஸ்டோன், ஜல்லி மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, அப்பகுதி பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், முன்னீர்பள்ளம் அஞ்சல், மேல கருங்குளம் கிராமம், நைனார் மஹாலில் 13.10.2023 அன்று காலை 10.30 மணியளவில் துவங்கியது.

மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், திருநெல்வேலி அவர்களையும், ஏனைய அரசு அதிகாரிகளையும், பொது மக்கள், தொழில் நிறுவனத்தின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும் இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றி பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வழங்கலாம் என தெரிவித்து, எழுத்துப்பூர்வமாக விண்ணப்பங்கள் வழங்க விரும்புவர்களும் அதனை வழங்கலாம் என தெரியப்படுத்தினார்.கூட்டத்திற்குவந்திருந்த பொதுமக்கள் கடைபிடிக்கவேண்டிய விதிமுறைகள் குறித்து எடுத்துரைத்து,திட்டம் குறித்தானபொதுமக்கள் தங்கள் கருத்துக்களைஅமைதியானமுறையில் ஒருவர் பின் ஒருவராக பெயர், ஊரினை தெரிவித்து, கருத்துக்களை பதிவு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

பின்னர் தலைமையுரையாற்றிய வருவாய் கோட்டாட்சியர், திருநெல்வேலி அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கருத்தினை கூற விரும்புகிறவர்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களது கருத்துக்களை தெரிவிக்குமாறும், தொழிற் திட்டம் தொடர்பான விளக்கங்களை, தொழிற் நிறுவனம் சார்பில் பொதுமக்களிடம் விளக்குமாறு கேட்டுக்கொண்டு, கூட்டம் துவங்குவதாக அறிவித்தார்.

அதன்பின் தி/ள். ஜோசப் ஜான் சாமுவேல் ரப் ஸ்டோன், ஜல்லி மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் புள்ளிவிளக்ககாட்சி(Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விவரித்தார்.

அதனைத் தொடர்ந்து வருவாய் கோட்டாட்சியர், திருநெல்வேலி அவர்கள்,பொதுமக்கள் இத்திட்டம் குறித்த தங்களது கருத்தினை வாய்மொழியாகவோ எழுத்தபூர்வமாகவோ ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விவரமாக தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார் இத்திட்டம் குறித்தான நன்மை மற்றும் தீமைகளை விரிவாக பொதுமக்கள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து, வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு,

1. திரு. தங்கமணி, கண்டித்தான்குளம்கிராமம்

என்னுடைய கிராமத்தின் அருகில் தான் சாம் சார் குவாரி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆதில் நாங்கள் அறுபது நபர்கள் பணி செய்து வருகின்றோம். அந்த குவாரியின் மூலமாக ஐம்பது குடும்பங்கள் வாழ்வாதாரம் பெற்றிருக்கிறது. அதன் மூலமாக நாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகள், குடும்பத்தின் வாழ்வாதாரம் அதன் மூலம் நடைபெற்றிருக்கிறது. சுற்றுச்சூழல் பொருத்தவரையிலே அதன் அருகாமையில் எங்கள் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதிலே கிட்டதட்ட 500 மீட்டர் தான் இருக்கறிது. அதன் மூலமாக எந்த வித பாதிப்பும் இல்லை. இந்த குவாரியின் மூலமாக நல்ல குடும்பங்கள் நல்ல வளர்ச்சி பெற்று வருகின்றன. அதற்கு தடையின்றி நீங்கள் தடையில்லா சான்று குடுக்கப்பட வேண்டும். அதாவது அருகாமையில் நடக்கப்பட்ட விபத்தை பற்றி ஒப்பிட கூடாது. அது எதர்ச்சியாக நடந்த விபத்து. அதன் மூலமாக நமது இந்திய தேசத்திலே அநேக இரயில் சேவைகள் காணப்படுகிறது. அந்த இரயில் சேவைகளினால் அநேக இரயில் விபத்துகள் நடைபெற்று அநேக உயிர் பலிகள் ஏற்படுகிறது. அது ஒரு விபத்து அதை நாம் விபத்து ஏற்படாமல் சரி செய்யப்பட வேண்டும். அதன் மூலமாக இந்த குவாரியிலையும் எந்த விபத்தும் இல்லை.அந்த M.sand மண் எடுக்கும்போது எங்களுடைய சாம் சார் அவர்கள் ஈரம் நீரை தெளித்து தூசியை பரக்காத அளவுக்கு அதை நாங்கள் பாதுகாத்து வருகின்றோம். இதன் மூலமாக இந்த M.sand மூலமாக கட்டுமான பணிகள் நடக்கின்றது. ஏன்னென்றால் ஆற்று மணல்கள் இப்போது அல்ல கூடாது என்று ஒரு தீர்மானம் இருக்கிறபடியால் இந்த எம்-சாண்ட மூலமாக தான் அநேக கட்டிடங்கள், அநேக வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. ஆகவே கோட்டாட்சியார் அவர்கள் கருத்தில் கொண்டும் மற்றும் சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் கவனத்தில் கொண்டு இந்த குவாரியினை சிறம்பட நடத்த தாங்கள் பணிவிடை செய்து அதில் பணி செய்கின்ற வாழ்வாதார மக்களுக்காகவும் நீங்கள் தடையில்லா சான்று வழங்கிட கேட்டுக்கொண்டார்.

2. திருமதி. ஜெபத்தாய் செல்வராணி, அடைமிதிப்பான்குளம் கிராமம்.

நாங்கள் இங்கு கருத்துக்கள் என்னவென்று கேட்பதற்கு வந்திருக்கிறோம். எல்லா மக்களுக்கும் பொதுவாக நன்றி கூறி எனது உரையை அரம்பிக்கிறேன். எங்கள் ஊரில் பொதுவாகவே ஒரு வயது முதல் முக்கியமாக இருந்தது. இந்த கல்குவாரி இல்லாமல் நாங்கள் வாழ்வதற்கு தகுதி இல்லாமல் இருந்து வந்தோம். பத்து வயது முதல் உள்ள பிள்ளைகள் கூட இந்த கிரஷரில் வேலை பார்த்து பத்து ரூபாய் சம்பளம் வைத்துக்கூட எங்கள் பிள்ளைகளை காப்பாற்றி வந்தோம். எங்கள் முன்னோர் காலத்தில் கூட பிள்ளைகளை காப்பாற்ற கிரஷர் உதவியாக இருந்தது. எல்லா மக்களுக்கும் பல உதவிகள் செய்து விடு கட்டுவதற்கோ, மற்ற பொது காரியம் செய்வதற்கோ, ரோடு போடுவதற்கோ எங்களுக்கு உதவியாக இருந்தது கல்குவாரி தான். எங்கள் கிராமத்தின் வட்டாரம் எல்லாம் குவாரி தான் பெருமையாக வழிநடத்தி வந்திருக்கிறது. அதே போல் கிரஷர் முதலாளி அவர்களும் எங்களுக்கு பல உதவிகளை செய்து எங்கள் பிள்ளைகளை காப்பாற்றி வந்து, எங்கள் பிள்ளைகளுக்கும் பிள்ளைகள் தலைமுறை தலைமுறைகளுக்கும் வழிநடத்த உதவியாக இருந்தது குவாரியில் உள்ள கான்ரேக்ட்கார்கல் தான். எங்களுக்கு பல உறுதுணையாக இருப்பது ராஜன் ஐயா அவர்கள் மற்றும் ஏகப்பட்ட கிரஷர் வைத்திருப்பவர்கள் பல நன்மைகள் செய்திருக்கிறார்கள். பல நன்மைகள் தான் செய்திருக்கிறார்கள் தீமைகள் இல்லை. எங்களுக்கு இந்த கல்குவாரி வேண்டும். எனவே,இந்த குவாரிக்கு அரசு அனுமதி அளித்திட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

3. திரு. யாக்கோபு ராஜமணி, ஒமநல்லூர் கிராமம்.

தாம் ஜே.சி.பி ஓட்டுநராக பணியாற்றி வருவதாகவும், குவாரியில் பாஸ் வந்தால் தான் பொருளாதாரம் நல்லா இருக்கும். இந்தக் குவாரி அமையும் பட்சத்தில் வீடு கட்டுவதற்கு மணல், கற்கள் எல்லாம் பாதி விலைக்கு கிடைக்கும். எங்களுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள். மேலும் இந்தக் கூட்டத்தில் பங்குபெற்றோர் அனைவரும் குவாரியை சுற்றியுள்ள கிராம மக்கள் தான். குவாரியால் எங்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. எனவே இந்தக் குவாரிக்கு கண்டிப்பாக அனுமதி தருமாறு கேட்டுக்கொண்டார். எங்களுடைய வாழ்வாதாரம் சிறப்பாக அமைவதற்கு இந்தக் குவாரி மிகவும் அவசியம் என கேட்டுக்கொண்டார்.

4. திருமதி. நிர்மலா, அடைமிதிப்பான்குளம் கிராமம்

தாம் வசிக்கும் பகுதியானது குவாரியிலிருந்து 2 கி.மி தொலைவில் உள்ளதாக தெரிவித்தார். எங்கள் ஊரிலிருந்து நூறுக்கும் மேற்ப்பட்டோர் வேலை செய்து வருகின்றனர். மேலும் இந்தக் குவாரியால் நிறைய மக்களின் வாழ்வாதரத்திற்கு வழி வகுக்கும் எனவும் கேட்டுக்கொண்டு, குவாரியில் பெரிய போர்வெல்லுக்கு பதிலாக சின்னக்குழி அமைத்து குவாரி பணிகள் செய்தால் அனைவருக்கும் நன்மை பயக்கும் என தனது கருத்தினை தெரிவித்தார்.

5. திருமதி. ஜான்சி, அடைமிதிப்பான்குளம் கிராமம்

தம்முடைய ஊருக்கு அருகில் சுமார் 2 கி.மி. தொலைவில் குவாரி அமையவுள்ளது எனவும், மேலும் இந்தக் குவாரியால் நிறைய மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதால், மக்களின் வாழ்வாதரத்திற்கு பயன் உள்ளதாக இருப்பதாக தெரிவித்தார். மேலும் குண்டுக்கல், ஜல்லி வகைகள் அருகிலேயே கிடைப்பதால் வீடு கட்டுவதற்கான செலவுகள் குறையும் என தெரிவித்தார்.

6. திரு. வெற்றிவேல்,அடைமிதிப்பான்குளம் கிராமம்.

இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்குவதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார். ஒரு வருட காலமாக குவாரிகள் இயங்காமல் இருந்த காரணத்தினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்த குவாரி வைத்து நிறைய மக்கள் பிழைக்கிறார்கள். திரு. ஜோசப்

ஜான் சாமுவேல் எங்கள் கோரிக்கையை நிறைவேற்றி வைத்தார்கள். எனவே இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

7. திரு. மௌனதுரை,பங்களா குடியிருப்புகிராமம்

கடந்த 30 வருட காலமாக தாம் கல்குவாரியில் தான் பணியாற்றி வருவதாக தெரிவித்தார். மத்திய அரசு கொடூரமாய் செய்வது தவறு. பாறையை உடைப்பதால் கஸ்டமும் இல்லை நஷ்டமும் இல்லை. மத்திய அரசு டாஸ்மாக் கடைகளை அடைக்கலாம் நாட்டுக்கு தண்ணீர் கொடுக்கலாம் இதையெல்லாம் விட்டுவிட்டு செய்கிற வேலையை ஏன் பரிக்கிறார்கள். மனிதருக்கு மதிப்பே இல்லை. எந்த கஸ்டம் வந்தாலும் முதலாளி தான் கவனிக்கிறார்கள். இந்தக் குவாரிகளால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என தெரிவித்து, இது போன்ற குவாரிகளுக்கு அரசு உடனே அனுமதி வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். அரசு புறம்போக்கு குவாரிகளுக்கு கூட அனுமதி வழங்கி நடத்த வழி வகை செய்ய வேண்டுமென தெரிவித்தார்.

8. திரு. கென்னடி,அடைமிதிப்பான்குளம் கிராமம்.

தாம் சிறுவயதிலிருந்தே சோடா கலர் நிறுவனம் நடத்தி வந்ததாகவும், பெரிய நிறுவனங்கள் வந்த பின் தம்முடைய தொழில் முடங்கி விட்டதாகவும்,என்னுடைய வயது 55 ஆகிவிட்டது. நான் 14 வயதிலிருந்து சோடா கலர் தொழில் செய்து வந்தேன். 25 வயது முதல் குவாரிக்கு தான் சென்றுக் கொண்டிருக்கிறேன். 13 வருடங்களாக என்னை வாழ வைத்தது இந்த குவாரி தான். வட மாநிலத்திலிருந்து வந்து கூட இந்த குவாரியில் பணி செய்கிறார்கள். அதன் பின்னர் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக குவாரி தொழிலில் வேலை பார்த்து வருவதாகவும் தெரிவித்தார். எனவே தமக்கு தொழில் வழங்கும் கல்குவாரி வருவதற்கு ஆவண செய்யுமாறு கேட்டுக்கொண்டார். எனவே மேற்கண்ட குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

9. திருமதி. இந்திரா,அடைமிதிப்பான்குளம் கிராமம்

குவாரி வைத்து நன்மைதான் உள்ளதை தவிர தீமைகள் எதுவும் இல்லை என தெரிவித்தார். எனவே இத்திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

10. திரு. ஜேக்சன், பூக்குழி கிராமம்

தாம் சொந்தமாக லாரி வைத்து தொழில் நடத்தி வருவதாகவும், கல்குவாரி அருகில் அமையும் பட்சத்தில் தொலை தூரத்திலிருந்து மணல், ஜல்லி கொண்டு வருவதற்கு பதில் அருகிலேயே கிடைத்தால், டீசல் மிச்சமாகி குடும்ப வாழ்வாதாரம் மேம்படுவதாகவும், லாரி வாடகை குறைந்தால், மணல் ஜல்லி விலை குறைவாக கிடைக்கும் என தெரிவித்தார். அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும், எனவே கல்குவாரியை நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

11. திருமதி. வயலட் லெட்சுமி, அடைமதிப்பான்குளம்கிராமம்

எங்களுக்கு குவாரியால் மிகவும் நன்மை ஏற்படுவதாகவும், வீடு கட்டுவதற்கு, ரோடு போடுவதற்கு, எம்-சாண்ட கிடைப்பதால் பயனுள்ளதாக இருக்கிறது. எனவே இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

12. திரு. இன்பராஜ், அடைமிதிப்பான்குளம் கிராமம்

குவாரியால் எங்கள் ஊருக்கு பல நன்மைகள் ஏற்படுவதாக தெரிவித்தார். எனவே இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

13. திருமதி. அன்னபுஷ்பம், அடைமிதிப்பான்குளம்கிராமம்

இந்தக்குவாரியால் நிறைய நன்மைகள் ஏற்படுவதாக தெரிவித்து, இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

14. திருமதி.தங்கமணி, அடைமிதிப்பான்குளம் கிராமம்

நாங்கள் சிறுவயது முதல் கல் தான் உடைப்போம். குவாரியால் பாதிப்பு எதுவும் இல்லை எனவும், எங்களது ஊரைச் சுற்றிலும் நிறைய குவாரிகள் உள்ளதாகவும் தெரிவித்து, இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

15. திரு. டேனியல், கண்டித்தான்குளம்கிராமம்

திருவாளர் ஜோசப் ஜான் சாமுவேல் அவர்கள் தாத்தா கால்த்திலிருந்தே குவாரி நடத்தி வருகிறார்கள். ஆநேக லாரி ஓட்டுநர்கள் பயன்பெறுவார்கள். நீண்ட காலமாக குவாரி நடத்தி அனுபவம் பெற்றவர்கள் இந்தக் கல்குவாரி உரிமையாளர்கள் எனவும், கல்குவாரி இப்பகுதியில் செயல்படுவதால், இப்பகுதி மக்களுக்கு நிறைய நன்மை கிடைக்கும் என்று கூறினார். கடந்த காலங்களில் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டே மேற்கண்ட குவாரி செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். எனவே அரசு விதிகளின்படி, அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

16. திரு. சௌந்திரராஜன், அடைமிதிப்பான்குளம் கிராமம்

எங்களுக்கு தொழில் வேண்டும். எங்கள் பகுதியில் விவசாய வேலை ஒன்றும் இல்லை. எனவே இந்தக் குவாரி அமைந்தால் தான் எங்கள் பகுதி மக்களுக்கு வாழ்வாதரம் என தெரிவித்து,குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

17. திரு. குமார், அடைமிதிப்பான்குளம் கிராமம்.

இந்தக் குவாரி அமைவதால் தங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார். மேலும் மேற்படி குவாரிக்கு அருகில் தமது தோட்டம் இருப்பதாக தெரிவித்து, தமது தோட்டத்திற்கு செல்லும் நடை பாதையை சிலர் அடைத்து வைத்திருப்பதாக தெரிவித்தார். எனினும் அமைக்கப்படவுள்ள குவாரியால் தமக்கு பாதிப்பு இல்லை எனவும் தெரிவித்து, தம்முடைய நிலத்திற்கு தமக்கு வழி விடாத பட்சத்தில் தமது எதிர்ப்பை தெரிவிப்பேன் என தெரிவித்தார்.

18. திரு. ரவி, பூக்குழி கிராமம்.

இந்தக் கல் குவாரியால் நிறைய நன்மைகள் ஏற்படுகிறதே தவிர, தீமைகள் ஒன்றும் இல்லை என தெரிவித்து, இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

19. திருமதி. தங்கமுத்து, அடைமதிப்பான்குளம் கிராமம்.

குவாரியால் நிறைய நன்மைகள் ஏற்படுகிறது என தெரிவித்தார். குவாரியை வைத்துதான் தமது ஊரில் நிறைய பேர் வாழ்கிறார்கள் என தெரிவித்து குவாரிக்கு விரைந்து அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

20. திரு. சாலமன், மூன்றடைப்பு கிராமம்

குவாரியால் நிறைய நன்மைகள் ஏற்படுகிறது எனவும், குவாரியானது ஊருக்கு பக்கத்தில் வேலை கிடைப்பதால், வீட்டிற்கு போய் எங்கள் பிள்ளைகளை பார்த்து வர வசதியாக உள்ளது என தெரிவித்து, குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

21. திருமதி. செல்வராணி, அடைமதிப்பான்குளம் கிராமம்

இந்தக் கல் குவாரியால் நிறைய நன்மைகள் ஏற்படுகிறதே தவிர, தீமைகள் ஒன்றும் இல்லை என தெரிவித்து, இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

22. திரு. சிம்சன்ராஜ்,அடைமிதிப்பான்குளம் கிராமம்

30 வருட காலமாக இந்தப் பகுதியில் குவாரிகள் செயல்படுவதாகவும், அவற்றால் பாதிப்பு எதுவும் இல்லை எனவும் தெரிவித்தார். எனவே குவாரி அமைவதற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

23. திரு. தேவசிங்கம், அடைமிதிப்பான்குளம் கிராமம்

குவாரியால் பாதிப்பு எதுவும் இல்லை எனவும், எனவே குவாரி அமைவதற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

24. திரு.பாலகிருஷ்ணன்,அடைமிதிப்பான்குளம் கிராமம்

குவாரியால் பாதிப்பு எதுவும் இல்லை எனவும்,மற்ற தொழில் வளங்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறது இந்த கல்குவாரி வந்தால் மக்களுக்கு நன்மையாக இருக்கும். எனவே குவாரி அமைவதற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

25. திரு. அன்பு ஹெரால்ட், மூன்றடைப்பு கிராமம்

இந்தக் குவாரி அமைந்தால் சுமார் 250 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனவும், குண்டுக்கல், ஜல்லி விலை மலிவாக கிடைக்கும் என தெரிவித்தார். எனவே அமையவுள்ள கல்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

26. திரு. ராஜமணி அலெக்ஸ் ராஜா, அடைமிதிப்பான்குளம் கிராமம்

இந்த குவாரியால் நன்மைதான். இந்தப் பகுதியில் குவாரி அமைந்தால் குண்டுக்கல், ஜல்லி ஆகியவை விலை குறைவாக கிடைக்கும் எந்த பாதிப்பும் இல்லை என தெரிவித்தார். எனவே இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

27. திருமதி. கனக புஷ்பம், அடைமிதிப்பான்குளம் கிராமம்.

கல்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

28. திருமதி.சாந்தி, அடைமிதிப்பான்குளம் கிராமம்

திருமதி. சாந்தி பேசும் பொழுது, இந்தக் குவாரி அமைந்தால் வீடு கட்டுவதற்கு தேவையான கல், மணல் போன்றவை விலை குறைவாக கிடைக்கும் எனவும் எனவே இந்தப் பகுதியில் இந்தக் குவாரி அமைந்தால் எங்களுக்கு நன்மை பயக்கும் என கருத்து தெரிவித்தார்.

29. திருமதி. ஜெயசூர்யா, அடைமிதிப்பான்குளம் கிராமம்

எங்கள் பகுதியில் குவாரி மற்றும் கிரஷர் அமைவது ஒரு வாழ்வாதாரம் தான். ஆனால் குவாரியில் போர்க்குழி அமைக்க கூடாது. போர்க்குழி அமைக்காமல் கம்பரஷர் குழி அமைக்க வேண்டும். அதே போல் ஈடி மருந்து வைக்காமல் நாணல் வெடி வைத்தால் ஊருக்கு எந்த பாதிப்பும் இருக்காது. தூசி பரவாமல் பாதுகாப்பாக இயக்கும் பொழுது அனைவருக்கும் நன்மை பயக்கும் என தெரிவித்தார்.

கூட்டமுடிவில், எழுத்து வடிவில் பொதுமக்கள் கொடுத்த மனுக்களை பெற்றுக்கொண்ட பின் ,வருவாய் கோட்டாட்சியர் திருநெல்வேலி அவர்கள் இதுவரையில் அமைதிகாத்து தங்கள் கருத்துக்களை கூறிய பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியைதெரிவித்துக் கொண்டார். மேலும் பொது மக்களுடைய கருத்துக்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் என்ற தகவலை தெரிவித்துக் கொண்டவுடன் கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,
திருநெல்வேலி.

வருவாய் கோட்டாட்சியர்,
திருநெல்வேலி